# இந்தியப் பொதுஉடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)

## தண்டகாரண்யச் சிறப்பு மண்டலக் குழு

**செய்தி அறிக்கை**

## மக்களுக்கு ஓர் அறைகூவல்

## சல்வா ஜூடும்மின் புதிய வடிவமும் பச்சை வேட்டையின் துணை அமைப்புமுமான இரண்டாம் சல்வா ஜூடுமைத் திரும்பப் பெறப் போராடுக !

*மவிகெப-வின் ஜீரம்ஹதி திடீர்த்தாக்குதலில் இறந்துபோன மகேந்திரக் கர்மாவின் மகனும், குண்டா சைத்திரம் அத்தமி தலைவர்களில் ஒருவனும், முதல் சல்வா ஜூடும்மின் குண்டர் படைத் தலைவர்களில் ஒருவனுமான சவீந்திர கர்மாவும் இன்னும் பிறரும் சேர்ந்து பஸ்தாரின் அமைதிக்காகவும் வளர்ச்சிக்காகவும் விகாஸ் சங்கிரஷ் சமிதி என்ற அமைப்பை அமைத்து இரண்டாம் சல்வா ஜூடுமைத் தொடங்கியுள்ளதாக மே 5ந் தேதி அறிவித்துள்ளனர். இந்துத்துவப் பாசிச பா.ஜ.க. அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமல், மக்களுக்கு எதிரான சக்திகளும், பா.ஜ.க. குண்டர்களும், காங்கிரசு கர்மா குடும்பமும் சேர்ந்து தொடங்கியுள்ள கொலைகாரக் குண்டர் படையான இரண்டாம் சல்வா ஜூடும் இல்லை. பச்சை வேட்டைக்குத் துணை அமைப்பாகவே சல்வா ஜூடும்மின் புதிய வடிவம் தொடங்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. ஜன் ஜாக்ரன், சல்வா ஜூடும், பச்சை வேட்டை, இப்போது தொடங்கியுள்ள இரண்டாம் சல்வா ஜூடும் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் மக்களை ஒடுக்குவதற்கான இராணுவ நடவடிக்கைகளே ஆகும். மாநிலத்தின் இயற்கை வளங்களை உள்ளூர் முதலாளிகளுக்கும் வெளிநாட்டு முதலாளிகளுக்கும் விற்பதற்காக வளர்ச்சி, அமைதி என்ற பெயரில் தொடங்கப்படுள்ளதே இந்த இராண்டாம் சல்வா ஜூடும். இது தண்டகாரண்ய மக்களின் உண்மையான தற்சார்பு வளர்ச்சிக்காகப் பாடுபடும் ஜன்தான் சர்க்கார் என்னும் புரட்சிகர மக்கள் அரசு வடிவத்தில் மலர்ந்துள்ள மக்கள் அதிகாரத்தை அழிப்பதற்காகவே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது மாநில மக்களின் மீது கொடூரமான பாசிச இராணுவ நடவடிக்கையும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒடுக்குமுறை நடவடிக்கையும் ஆகும்.*

*கடந்த 35 ஆண்டுகள் புரட்சி இயக்க வரலாற்றில் நெஞ்சுரத்துடன், பல வகையான இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கைகளை பஸ்தாரின் வீரஞ்செறிந்த வெகுமக்கள் எதிர்த்துப் போராடியுள்ளனர். ஆகவே இரண்டாம் சல்வா ஜூடுமையும் வெற்றி கொள்வார்கள். சல்வா ஜூடும் மகேந்திர கர்மாவும், இன்னும் பிற குண்டர்களும் மேற்கொண்ட ஜன் ஜாக்ரன் முதற்கொண்டு பல ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்குப் புரட்சிகர இயக்கமும் மக்கள் யுத்தமும் பலத்த அடி கொடுத்துள்ளன.*

*ஜன் ஜாக்ரன் முதல் சல்வா ஜூடும் வரையில் நாம் பெற்ற அனுபவங்கள், படிப்பினைகளுடன் இரண்டாம் சல்வா ஜூடுமை வலுவாக எதிர்க்குமாறு தண்டகாரண்யத்தின் போராடும் மக்களுக்கு எமது கட்சி அறைகூவல் விடுக்கிறது. கடந்த காலங்களில் இருந்ததைப் போன்று, உங்கள் சொந்த நிலத்திலிருந்தும் காட்டிலிருந்தும் உங்களை வெளியேற்றும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக மிகுந்த கவனத்தோடு இருக்குமாறு பஸ்தாரின் வெகுமக்களையும், குறிப்பாக ஆதிவாசிகளையும் வேண்டுகிறோம். இந்த வெளியேற்றுவதற்கான ஒடுக்குமுறை நடவடிக்கை பஸ்தாரின் ஆதிவாசிகளுக்கும் பிற மக்களும் மிகப் பெரிய ஆபத்து ஆகும். ஆகவே, மக்களை வெளியேற்றும் மக்களுக்கு எதிரான இந்த ஒடுக்குமுறை நடவடிக்கையை எதிர்த்து, தம் சொந்த இடத்திலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்த்து மட்டுமல்லாமல், இந்த ஒடுக்குமுறை நடவடிக்கை முழுவதையுமே எதிர்த்து உறுதியான நிலைப்பாடு எடுத்துப் போராடுமாறு ஆதிவாசிகளையும், பிறரையும், சர்வ ஆதிவாசி சமாஜங்களையும் (அனைத்துப் பழங்குடி அமைப்புகளையும்), அனைத்து மக்கள் அமைப்புகளையும் நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்.*

சுரண்டும் ஆளும் வர்க்கங்களின் சொற்களில் அமைதி என்றால் சத்தமில்லாமல் மக்கள் மீது வன்முறையையும் அட்டூழியங்களையும் ஒடுக்குமுறையும் சுரண்டலையும் கொள்ளையிடுதலையும் மேற்கொள்வதே ஆகும். வளர்ச்சி என்றால் அழித்தொழிப்பது, மக்களை முற்றுமுழுவதுமாக அழித்தொழிப்பது ஆகும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை வளர்ச்சி என்றால், உள்நாட்டு வெளிநாட்டுத் தொழிற்கழகங்களின் வளர்ச்சியை, நிலக்கிழார்களின் வளர்ச்சியை, அதிகாரம் மிக்க அரசியல் தலைவர்களின் வளர்ச்சியைக் குறிக்கும். அவர்கள் புரிதலில் வளர்ச்சி என்பதன் அர்த்தம் மாபெரும் தொழிற்சாலைகள், பெருந்திட்டங்கள், பெரிய அணைகட்டுகள், சிறப்புப் பொருளாரதார மண்டலங்கள், பெரிய தொழிற்பேட்டைகள், அணுஉலைத் திட்டங்கள், போர் விமானங்கள், இராணுவ வலைப்பின்னல், இராணுவப் பயிற்சி பள்ளி, நீண்ட நெடுஞ்சாலைகள், அதிவிரைவு சாலைகள், ஐந்து நட்சத்திர விடுதிகள், விண்ணை முட்டும் கட்டிடங்கள், தொலைபேசிக் கோபுரங்கள், பன்னாட்டு வங்கிகள், காவல் நிலையங்கள், முகாம்கள் முதலானவையே. மக்களைப் பொறுத்தவரை வளர்ச்சி என்பதன் பொருள் அகற்றப்படுதல், வெளியேற்றப்படுதல் ஆகும். நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு உணவு, உடை, குடிநீர், உடல்நலம், கல்வி, வேலைவாய்ப்பு, நிலம், நீர்பாசனம் முதலான அடித்தளங்களே உண்மையான வளர்ச்சி என்று எமது கட்சி புரிந்துகொள்கிறது.

1990-91ஆம் ஆண்களின் முதல் ஜன் ஜாக்ரன், 1997-98 ஆம் ஆண்டுகளின் இரண்டாம் ஜன் ஜாக்ரன் அபியன், 2005 ஜுனில் தொடங்கப்பட்டு, நான்கு ஆண்டுகள் தொடர்ந்த இராணுவம் ஒருங்கிணைத்த சல்வா ஜூடும், 2009 இல் ஆரம்பிக்கப்பட்டு, நாடு தழுவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட பாசிச இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கையான பச்சைவேட்டை ஆகியவற்றின் மூலம் நாம் பெற்றிருக்கும் கசப்பான அனுபவத்தின் படி, கொலைகள், கொடூரங்கள், போலி மோதல் கொலைகள், மோதல் கொலைகள், பெண்கள் மீதான பாலியல் அட்டூழியங்கள், கொள்ளையிடுதல், வீடுகளை எரித்தல், போலிக் கைதுகள், மக்களைச் சிறையிலடைத்தல், நெடுநாள் அல்லது வாழ்நாள் முழுவதும் சிறையிலடைத்தல், கணக்கற்று கிராமங்களை அழித்தொழித்தல், நிவாரண முகாம் என்ற பெயரில் வலுக்கட்டாயமாக மக்களை முகாம்களில் அடைத்துவைத்தல் முதலான எண்ணற்ற அட்டூழியங்களை இப்போது தொடங்கப்பட்டுள்ள இரண்டாம் சல்வா ஜூடும் மக்கள் மீது இழைக்கும். ஒரு சிறு கிராமத்தைக்கூட விட்டு வைக்கமாட்டார்கள். பயமூட்டியும் அச்சமூட்டியும் லட்சக் கணக்கான பஸ்தாரின் மக்களை ஒரிசாவுக்கும் தெலங்கானாவுக்கும் புலம்பெயர வைப்பார்கள். பஸ்தாரின் பத்தாயிரக் கணக்கான மக்களை வீடற்றவர்கள் ஆக்குவார்கள். காடுகள் ஆயுதப்படைகளின் தங்குமிடங்கள் ஆக்கப்படும். இவற்றையெல்லம் பஸ்தாரின் மக்கள் மட்டுமல்ல, இந்த நாட்டின் மக்களும், உலக மக்களும்கூட அறிந்தே உள்ளனர். பயமூட்டியும் அச்சமூட்டியும் பேராசைக் காட்டியும் ஆயிரக்கணக்கான ஆதிவாசி இளைஞர்கள் சிறப்புக் காவல்படைகளில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மக்களின் சொந்த கைகளைக் கொண்டே அவர்களின் கண்களைக் குத்துவது சாத்தியமில்லை, ஆனால் அதையே செய்ய முயல்கின்றனர். அமைதிக்கான நடவடிக்கை என்றே முதலாம் சல்வா ஜூடும்கூட பிரச்சாரம் செய்யப்பட்டது என்பதையும் இங்கு மனதில் கொள்ளவேண்டும்.

இந்த வகையான நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் வலிமையான மக்கள் இயக்கமும், மக்கள் யுத்தமும் கடுமையான எதிர்ப்பைக் காட்டியுள்ளன, தொடர்ந்தும் எதிர்ப்பு காட்டும். நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட பாசிச இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கையான சல்வா ஜூடுமை எதிர்த்து முழக்கமிட்டு முற்போக்கான, நாட்டுப்பற்று மிக்க அறிவாளிகள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள் வீதிகளில் இறங்கினார்கள். சட்டரீதியாகப் போராடினார்கள். இவையே அரசு சல்வா ஜூடுமை நிறுத்தியதற்கான மிக முக்கியமான காரணம் ஆகும். இப்போதைய பச்சை வேட்டையை எதிர்த்து, கட்சித் தலைமையின் கீழ் மவிகெப-வும், ஜன்தன் சர்க்காரும், மக்கள் திரள் அமைப்புகளும், வெகுமக்களும் எண்ணற்ற தியாகங்களைச் செய்துள்ளனர். உலகம் முழுவதிலும், நமது நாட்டிலும் உள்ள பாட்டாளி வர்க்க அமைப்புகளும், மாவோயிச கட்சிகளும் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும், அறிவாளிகளும், முற்போக்கான நாட்டுப்பற்றுமிக்க மக்களும், ஊடகங்களும் இந்தியாவில் நடைபெறும் மக்கள் யுத்தத்தை ஆதரித்தும் பாசிச இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கைகளை எதிர்த்தும் இதற்கு முன் கேள்விப்பட்டிராத வகையில் அணிதிரண்டு வருகின்றனர்.

மக்களுக்கு எதிரான ஒருங்கிணைக்கப்பட்ட பாசிச ஒடுக்குமுறைகளை எதிர்த்து குரலெழுப்பி, தெருக்களில் இறங்குமாறு உலகம் முழுவதிலும் உள்ள, நமது நாட்டில் உள்ள முற்போக்கான நாட்டுப்பற்று மிக்க அறிவாளிகள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமை அமைப்புகளுக்கு மீண்டுமொரு நாங்கள் வேண்டுகோள்

விடுக்கிறோம். ஆதிவாசி மக்களின் வாழிடமான காடு, நிலம், இயற்கை வளம், சுற்றுச்சூழல், பழங்குடிகளின் வாழ்வு, அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாக்க முன்வருமாறும் வேண்டுகோள் விடுகிறோம். அரசாங்கத்தால் பயமுறுத்தப்பட்டோ, பேராசை ஊட்டப்பட்டோ சிறப்புக் காவல் படையில் சேர்ந்துள்ளவர்கள் மக்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்போ, ஈடுபட்டதற்குப் பின்போ தங்கள் தவறுகளுக்காக வருந்தி மக்களிடம் சரணடைய வேண்டும். அவர்கள் தாங்கள் செய்த தவறுகளுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும். தங்கள் சொந்த மக்கள் மத்தியில் வாழ வேண்டும். பயமுறுத்தப்பட்டும், பேராசை ஊட்டப்பட்டும் மக்களுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்தவர்கள் தங்கள் சொந்த பலவீனத்திலிருந்து வெளியே வருமாறு எமது கட்சி வேண்டுகோள் விடுக்கிறது. தம் சொந்த மக்களை வந்து சந்தித்து, அவர்களிடம் தம் தவறுகளை ஒப்புக்கொண்டு, மன்னிப்பு கேட்டு விட்டு, இயல்பான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ ஒரு வாய்ப்பையும் எமது கட்சி வழங்குகிறது.

மக்களுக்கு எதிரானவர்கள், மக்களின் எதிரிகள், துரோகிகள் ஆகியோரை மக்கள் நீதிமன்றங்கள் முன் நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு எமது கட்சி மவிகெப-வைக் கேட்டுக் கொள்கிறது.

**ஹுட்ச உசேந்தி**
செய்தித் தொடர்பாளர்
தண்டகாரண்யச் சிறப்பு மண்டலக் குழு
இபொக மாவோயிஸ்ட்
மே 6 2015